**DEPOSITION OF WITNESS**

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.103/2020**

**PW-5**

**Date :-04.08.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | சூரியகுமார். | | |
| த/பெ. | ராஜீ | Calling | அயனிங் கடை |
| Village | உறையூர் | Religion | |
| Taluk | திருச்சி | Age | 62/2026 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

**நான் தற்போது திருச்சி உறையூரில் வசித்து வந்து அயனிங் கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை எனக்கு தெரியும் 2019 ல் கோயினுர் தியேட்டர் அருகே வைத்து பார்த்தேன் . நான் அப்போது நடந்து சென்றுக்கொண்டிருந்தபோது இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அந்தநபர்களை போலீசார் துரத்தி சென்று பிடித்துவிட்டார்கள். அந்த இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து வந்த நபரிடம் இருந்து போலீசார் செயினை கைப்பற்றினார்கள். அந்த நபர்களை பார்த்தால் தற்போது எனக்கு கண் பார்வைசரியாக தெரியததால் அடையாளம் தெரியாது. அந்த நபர்களின் பெயர்கள் ஏசுதாஸ் மற்றும் வேலுசாமி என்று சொன்னார்கள் . ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள போலீசார் என்னை விசாரித்து கையொப்பம் பெற்றார்கள்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**எனது முன்னிலையில் யாரையும் போலீசார் பிடிக்கவில்லை போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிதான் எதிரிகளை தெரியும் என்றால் சரியல்ல .**

Sd/-xxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.